மணி சுமார் நாலரையிருக்கும். காவேரிபுரத்தில் கொஞ்சங் கொஞ்சமாக வெளிச்சம் குறைய ஆரம்பித்தது. சுகமான காற்று வீசினது. எங்கு பார்த்தாலும் மின்சார விளக்குகள் ஜொலித்துக்கொண்டிருந்தன. ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். சாமா இந்த இடங்கள் அனைத்தையும் கடந்து, ஊரைத்தாண்டி, தனக்குத் தெரியாத ஒரு வீட்டண்டை வந்து நின்றான். அந்த வீடோ அப்பொழுதுதான் பாதி கட்டப்பட்டிருந்தது, சுவர்களிலெல்லாம் செங்கற்கள் தெரிந்தன. சாமா இங்கு நின்று வீட்டுக் கதவை கவனித்தபோது, அங்கே 13 என்ற நம்பர் காணப்பட்டது. அந்த நம்பர் மிகவும் கெட்டதென்பது சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தனது கையிலிருந்த கயிற்றை பத்திரமாய்ப் பிடித்துக்கொண்டு வீட்டின் உள்ளே புகுந்தான்.

உள்ளே, எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. சுவரைத் தவிர வேறொன்றையும் அவன் முதலில் பார்க்க இயலவில்லை

ஒரு சிறு வழியைப் பிடித்துக்கொண்டு, சில படிகள் ஏறி மேல் மாடிக்குச் சென்றான். அங்கோ இருட்டு அமாவாசைபோல் இருந்தது. கொஞ்சம் வெளிச்சத்தை உண்டுபண்ணும் பொருட்டு தனது சட்டைப் பையைத்துளாவினான். இருட்டிலே இன்னும் கொஞ்சம் முன்னே தடவிக்கொண்டு சென்ற போது, ஒரு மனிதன் உடம்பை தனது கைகளால் ஸ்பரிசித்துப் பார்த்தான். அந்த உடம்போ, மேலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது. அது ஒரு மனிதன் என்று சாமா அறிந்தானோ இல்லையோ, பயந்து, மயிர்க்கூச்சலடைந்தான். உடல் வேர்த்தது. பின் தன்னிடத்திலிருந்த, ஒரு தீப்பெட்டியிலிருந்து ஒரு குச்சியைப் பொருத்தினான். கொளுத்தினதும், செத்தவன்போல ஒரு மனிதன், கதவிலிருந்து கட்டப்பட்ட ஒரு கயிற்றிலிருந்து தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் இருதயம் வெடித்துவிடும்போலிருந்தது.

அந்த மனிதனைக் காப்பாற்றவேண்டுமென்று நினைத்து, தனது பையிலிருந்த ஒரு சிறிய கத்தியை எடுத்து தடித்த அந்த கயிற்றை அறுக்க ஆரம்பித்தான். நெடுநேரம் கழித்து, ஒரு கயிறு அறுபட்டது. பின்பு மற்றொரு கயிறும் அறுபடவே, அந்த மனிதன் சரீரம் பொத்தென்று கீழே விழுந்தது. உடனே தானும் அதனுடன் கீழே விழுந்தான். சாமா அந்த சரீரத்தின் காலரைத் தளர்த்திவிட்டு எப்படியாவது உயிர் வரக்கூடுமா என்று பிரயத்தனப்பட்டான். இந்த சரீரத்தை போலீசாரிடம் ஒப்புவித்துவிடவேண்டும் என்று அவன் யோசித்துக்கொண்டிருந்தபோது, அந்த மனிதன் அசைந்து, பெருமூச்சுவிட்டுப், பின்பு கண்விழித்து "நான் இப்போது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான்.

"நீ தூக்கிட்டு இறந்திருப்பாய். கடவுள் செயலால் நான் உன்னைக் காப்பாற்றினேன்" என்றான் சாமா.

இருட்டில் ஒருவரையொருவர் பார்க்க இயலவில்லை. உயிர் பெற்றவன் "நான் சாகத் துணிந்தால் நீ எப்படியடா வந்து

என்னைக் காப்பாற்றக்கூடும்?" என்று ஓங்கி சாமா கன்னத்தில் ஒரு அறைகொடுத்தான். சாமா கோபித்து "உன் கண்களைப் பிடுங்கிவிடுவேன்! ஜாக்கிரதை?" என்றான். கீழே கிடந்த ஒரு மெழுகுவத்தியை சாமா பொருத்தினான்; அந்த மனிதனுக்கும், சாமாவின் வயதுதான் இருக்கும். அந்த மனிதன் சாமா கையிலிருக்கும் கயிற்றைப் பார்த்து "ஏண்டா, நீ தூக்குபோட்டுக்கொள்ளும் நோக்கத்துடன் இங்கு வந்துவிட்டு, என்னை ஏனடா! கெடுத்தாய்?" என்றான்.

"எனக்கு இரக்கம் உண்டாகி, நான் வந்த காரியத்தையும் மறந்து உன்னைக் காப்பாற்றத் துணிந்தேன்" என்றான் சாமா.

அதற்கு புதிய மனிதன், "நீ, சாகத்துணிந்ததின் காரணம் யாது?" என்று வினவினான்.

"உலக வாழ்க்கை ஒரு பெரிய துன்பமாக இருந்தது" என்றான் சாமா.

"எனக்கும் அப்படியேதான். உன் துன்பத்திற்குக் காரணம் ஒரு ஸ்திரீயேதான், என்று நினைக்கிறேன்?"

"ஆம், ஒரு ஸ்திரீதான்" என்று சாமா பெருமூச்சுவிட்டான்.

"அவளை விட்டுவிட்டு வேறொருத்தியை சேர்த்துக்கொள்ளேன்?"

"அவளை விட்டுவிடுவதா? அவளை எப்படியாவது மணந்துகொள்ள ஆசைப்படுகிறேன்."

"அப்படியா சமாச்சாரம். நீ ஒருவளை அடைய முடியாது சாகத்துணிந்தாய்; நான் ஒருத்தி வலையில் சிக்கி நீங்கக்கூடாது, சாகத்துணிந்தேன்," என்றான். பின்னும் அவன் "விளக்கணைந்துபோவதற்குள் நாம் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். சரி நீ அந்த ஸ்திரீயை அடையக்கூடாததின் காரணமென்ன? நீ, பார்ப்பதற்கு அழகாய்த்தானிருக்கிறாய்?" என்றான்.

"அவள் என்னை வெறுக்கவில்லை. அவள் மிகவும் புத்தி சாலி. ஏற்கனவே, அவளுக்கு ஒரு கணவன் இருக்கிறுன்; அவள் அவன் மனத்தை உடைத்து, என்னை மணக்கமாட்டாள். இதுதான் விஷயம்! அழகில், ரம்பையைப் போன்றவள் தான்."

அதற்கு மற்றவன் "நான் அறியாமல் ஒரு நாடக மாதைக் கலியாணம் செய்துகொண்டுவிட்டேன். அவளைத் தவிர யாரை வேண்டுமானுலும், மணந்திருப்பேன். அந்தக் கஷ்டம் இப் போதுதான் புலனுகின்றது" என்றுன்.

அதற்கு சாமா, "ஆமாம், தற்காலத்தில் அனேக அழகிய ஸ்திரீகள் நாடகங்களில் சேர்ந்து பிழைக்கிறுர்கள். உதாரண மாக, நான் காதலிக்கின்ற ஸ்திரீகூட ஒரு நாடக மாது தான்" என்றுன்.

புதிய மனிதன், "அப்படியானுல், அவள் பெயரென்ன?"

"அவள் பெயர்—லீலாவதி என்று எல்லோரும் சொல் கிறுர்கள்."

மற்றவன் குதித்தெழுந்து, "ஆஹா! லீலாவதியா, அவள் என் பெண்சாதியல்லவா."

"உன் பெண்ஜாதியா? என்ன உளறுகிறுய். கிடையவே கிடையாது."

"நான் சொல்வதைக் கேள், நான்தான் அவளைக் கலியா ணம் செய்துகொண்டுள்ளேன்."

"அவள்தான் எனக்கு இணங்கவில்லை."

"நீ அவளை இச்சிப்பது உண்மைதானே? அவளைக் காப் பாற்றுவாயா?

"நன்றுக வைத்துக்கொள்வேன். நானும் நாடகத்தில் தான் வேலையில் அமர்ந்துள்ளேன்."

"சரி, எனக்கோ, அவளை வைத்து காப்பாற்ற முடிய வில்லை. ஆதலால்தான் உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனித்

தேன். நான் இனிமேல் அவளுடன் இருக்கமாட்டேன், இந்த ஊருக்கு அப்பால் உள்ள ஒரு மலைக்குகையில் போய் வசிப்பேன். நீ செய்யவேண்டுவதென்னவெனில், மாதா மாதம், முதல் தேதியானதும், 40 ரூபாய் அனுப்பிவிடு. நீ பின்பு அவளை என்னவேண்டுமானாலும் செய்துகொள்" என்றான்.

"ஆனால் அவள் இதற்கு ஒப்புக்கொள்ளவேண்டுமே?"

"அதற்கென்ன, நான் வேண்டுமானால், அவளுக்கு எழுதி விடுகிறேன்."

"உனது கஷ்டமனைத்தும் நிவர்த்தி ஆய்விட்டதென்று நினைத்துக்கொள், விளக்கும் அணையப்போகிறது. போகலாம், வா!" என்றான் லீலாவின் கணவன்.

இருவரும் தோள்மேல் கைகள்போட்டுக்கொண்டு நடந்தனர். ஒரு ஹோட்டலில் நுழைந்து, நன்றாக தின்றுவிட்டு குடிக்க ஆரம்பித்தனர்.

"உனது புது பெண்ஜாதிக்காக நான் குடிக்கிறேன்" என்று புது ஆசாமி பாட்டிலைக் காலிபண்ணினான்.

"எனது வீட்டுக்குள் போவதற்கே எனக்கு பயம். அந்தக் கஷ்டமெல்லாம் இப்போது ஒழிந்தது. ஹோட்டலில்தான் நான் பயமின்றி சாப்பிடுகிறேன்."

"என்னடா, இன்னும் என்னென்னமோ சொல்லுகிறாயே, விஷயம் என்ன?" என்றான் சாமா.

"அவள் ஒருவிதமான மனுஷி. அதிக ஆடம்பரமாயிருப்பாள். அவளுடைய ஜோரே, ஜோர். ஆனால் பாம்புகள், மிகவும் தொந்தரவைத்தரும்."

"பாம்புகளா?" என்றான் சாமா.

"ஆம், அவைகள் அவளுக்குத்தேவை. அவை இருக்கும் இடத்தில் இருக்கும், ஆனால் எனக்கு மாத்திரம் கொஞ்சம் கஷ்டமாயிருந்தது. அவைகள் எங்கு வேண்டுமானாலும் வரு

கின்றன. நான் வீட்டில், ஒரு இடத்திலும் நிம்மதியாய்த் தூங்க முடியாது; ஏனெனில், படுக்கை அடியில் ஒரு கருநாகம் படம் எடுத்துக்கொண்டு இருக்கும். பாம்புடன் பழகுவது—அவள் தொழில். ஆனால் எனக்கு ரொம்ப பயம். நானும் சொல்லிப் பார்த்தேன். பலிக்கவில்லை. பாம்பை வைத்தா என்னைப் பயமுறுத்துகிறது?" இவ்விதம் சொல்லி கொஞ்சம் கண்ணீர் வடித்தான், லீலாவின் புருஷன்.

இந்த சங்கதியைச் சாமா கேட்டானோ இல்லையோ, அவன் அடிவயிற்றில் இடிவிழுந்தாற்போல் இருந்தது. காபி ஓட்டல் காரனுக்கு பில்லைச் செலுத்திவிட்டு, வெளியில் வந்தான்.

"அது எப்படியானாலும் சரி, நாம் ஒரு நல்ல தீர்மானத்திற்கு வந்துவிட்டோம்" என்றான் புதிய மனிதன்.

"நல்ல தீர்மானமா? என் தலையில் கல்லைப்போடலாமென்றல்லவா நினைத்தாய்?" என்றான் சாமா.

"என்னடா உளறுகிறாய்? பேச்சு பேச்சுதான். அதன்படி நடந்தே தீரவேண்டும். என்னை ஏமாற்றப்பார்க்கிறாயா?"

அதற்கு, சாமா "நான் உன் பெண்சாதியைப்பற்றிய எண்ணத்தை அடியோடு விட்டுவிடுகிறேன். எனக்கு இனிமேல் விவாகமே வேண்டியதில்லை. குட்னைட். போய் வருகிறேன்" என்றான்.

"அடே! நில்லடா! பிறகு என்கதி என்ன ஆகும்? முட்டாள் பயலே,—மறுபடியும் தூக்கு போட்டுக்கொண்டு விடலாமென்றாலோ, கயிற்றையும் அறுத்துவிட்டாயே?!" என்று கூவினான் லீலாவின் புருஷன்.

சி. ஆர். சங்கரன்.

புரட்சி! புரட்சி! புரட்சி!

(குடுமி)

இதென்னடா இது "கிண்டியாயநம" என்று 'புரட்சி' என்ற வார்த்தையைத் தூக்கிப் பொத்தென்று போடுகிறானே, என்று நினைக்காதீர்கள். எனக்கும் என் நண்பன் சோணாசலம் 'புரட்சி' என்று சொன்னபோது தூக்கி வாரித்தான் போட்டது. நானும் ஒன்றும் தகவல் புரியாமல் முதல்தரம் நாடக மேடையில் ஏறுகிறவர்கள் மாதிரி விழித்தேன். சமாசாரம் பூராவும் கேட்டபிறகுதான் 'இம்பட்டுத்தானா' என்ற முடிவுக்கு வந்தேன்.

விஷயம் என்னவோ சிறியதுதான். ஆனால் ஜனங்கள் அதைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்ததுதான் பெரியது.



புரட்சி! புரட்சி! புரட்சி!

நாளைக் காலை 5-மணியிலிருந்து!
பெரும் புரட்சி
ஆகார விஷயங்களில்

மறு விளம்பரத்திற்குக் காலையில் எதிர்பாருங்கள்.

கூத்தியம்பேட்டை குருமாரெட்டித்தெருவில் ஒருநாள் மாலை ஆறு மணிக்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தம வாண்டையார், வாய்கொள்ளாச் சுருட்டொன்றை வாயில் வைத்துக்கொண்டு, தென்னிந்தியா ரயில்வேயில் கூட்ஸ் இழுக்கும்

வண்டிபோல் புகைவிட்டுக்கொண்டு சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த மேற்கண்ட விளம்பரமொன்றைப் படித்தவண்ணமிருந்தார். போலீஸ்காரர்கள் நிற்குமிடத்திற்கு கூட்டங்கூட ஜனங்களை அழைக்கவேண்டியதில்லையல்லவா? (ஆம் என்று ஒப்புக்கொள்ளுங்கள் இல்லாவிடில் நம் மானம் கப்பலேறிவிடும்).

நொடிப்பொழுதில் தெருவெல்லாம் ஒரே கும்பலாய்விட்டது. எள்ளுப்போட்டால் எள்ளுவிழாது. போட்ட எள்ளு எங்கே போயிற்றென்றும் சொல்லமுடியாது (அதாவது என்ஞல் முடியாது; கண்டுபிடித்தனுப்புபவர்களுக்கு ஆடுதுறை அழுகை வாழைப்பழங்களில் வேண்டுமாஞல் ஐந்து அனுப்பி வைக்கிறேன்).

கூட்டம் தாங்கமுடியவில்லை. இன்ஸ்பெக்டர் வாண்டையாருக்கும் ஆத்திரம் தாங்கமுடியவில்லை. தெய்வீகமான தனது தடியைத் தூக்கிப் பெருமாள் கோயிலில் திருவடிசாதிப்பது போல் ஒவ்வொருவரையும் சேவிக்க ஆரம்பித்தார். மறுநாட் காலை நடக்கவேண்டியிருந்த புரட்சி முதல்நாள் சாயங்காலமே ஆரம்பித்துவிட்டதுபோலிருந்தது. இன்ஸ்பெக்டர் மறுபடியும் தடியைத் தூக்கிக்கொண்டு நாலாபக்கமும் திரும்பி "ஸாக்கா, பேக்கா" (போதுமா இன்னும் வேண்டுமா) என்று கேட்க ஆரம்பித்தவுடன் கூட்டம் இருந்தவிடம் தெரியாமல் கலைந்து போய்விட்டது.

இன்ஸ்பெக்டர் வாண்டையார் சாவதானமாகச் சுவற்றின் பக்கமாய்ப் போய் விளம்பரத்தைக் கிழித்தெடுத்துக்கொண்டு "விட்டேனுபாரு நானும் என் மண்டையில் மயிர் முளைத்த நாளாய் போலீஸ் இன்ஸ்பெக்டராய் இருந்துவருகிறேன். இதுவரையில் கூத்தியம்பேட்டையில் ஒரு கலவரமும் நடந்ததில்லை. தேசம் முழுதும் சட்டமறுப்புக்கள், புரட்சிகள், கலவரங்கள் முதலியன நடந்துவரும்போதெல்லாம், கூத்தியம்பேட்டை மட்டும் 'ஆயிரங் குன்றுகள் தவிடுபொடியாஞலும் அசையாத

வேல் முருகா' என்று அசையாமல் செத்தநாய் செருப்பைக் கடித்தாற்போல், கிடந்துவருகிறது. நாளைக் காலை 5-மணியிலிருந்து என்னமோ புரட்சியாம், புரட்சி! எல்லாவற்றையும் பார்த்துவிடுகிறேன்" என்று கர்ஜித்துக்கொண்டே போலீஸ் ஸ்டேஷன் பக்கம் சென்றார்.

... ...

மறுநாட் காலை சுமார் நாலரைமணியிருக்கும். போலீஸ் ஸ்டேஷனில் கடியாரம் ஒன்று அலாரம் அடித்தது. உடனே ஒரு உருவம் கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளிக்கிளம்பி ஓரிடத்திலும் நில்லாமல் நேரே வீதிவழியாய்ப் போய் குருமா ரெட்டித்தெருச் சந்தில் போய் நின்றது. (இப்படித்தான் நாவலாசிரியர்கள், வடுவூர் கே. து. அய்யங்காரோ அல்லது ஆ. கு. சாமி முதலியாரோ எழுதுவார்கள். ஆனல் குடுமி யெழுதுவதெப்படியென்றால்) இன்ஸ்பெக்டர் வாண்டையார், சந்தில் நின்றுகொண்டு, சிவபுரிப் புகையிலை ஒன்றைச் சுருட்டாகச் சுருட்டி வாயில் வைத்துக்கொண்டு, பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்து, ஒரு குச்சியைக் கிழித்து சுருட்டைப் பற்ற வைக்க ஆரம்பித்தார். அதற்குள் பின்பக்கத்திலுள்ள எதையோ பார்த்துவிட்டு, சுருட்டைப் பொத்தென்று கீழே போட்டுவிட்டு சுவற்றின் பக்கம் ஓடினார். அங்கே ஒரு மனிதன் சுவற்றில் ஒரு ஏணியைச் சாற்றி அதன்மேல் ஏறி நின்றுகொண்டிருந்தான். வாண்டையார் பூனைபோல் அவனருகில் வந்து நின்றுகொண்டு, அடே இறங்கடா என்றார். அவனும் நடு நடுங்கிப்போய்விட்டான். கையில் ஒரு விளம்பரமும், அரைப்படி சோற்றுப்பருக்கையும் இருந்தது. விளம்பரத்தைப் பிடுங்கிக்கொண்டு ஆசாமியை நெட்டிக்கொண்டே போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார். கையிற் காப்பைப் போட்டு இரண்டு போலீஸ் வீரர்களைக் காவல் வைத்துவிட்டு விளம்பரத்தைப் பார்த்தார். அதில் :—

புரட்சி! புரட்சி! புரட்சி!

இன்றுமுதல் ஆகார விஷயங்களில் ஒரு பெரிய
புரட்சி உண்டாகியிருக்கிறது!

எதனால்



துப்பாக்கிமார்க்கு அசல், சுத்தமான எண்ணெயாலும், நெய்யாலுந்தான். வாங்கும்போது துப்பாக்கிமார்க்கு லேபிளைப் பார்த்து வாங்குங்கள். மற்ற விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும் :—

தனம் அண் கோ.,
உளுந்தூர் ரோட்,
தமாாஸ்.

என்று அச்சிடப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டருக்கு முகத்தில் ஈயாடவில்லை. முகத்தில் கொலைக்குறி தோன்றிற்று. இவ்வளவும் விழலுக்கிறைத்த நீராயிற்றே என்று அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டார்.

ஓம் தத் ஸத்.

வெண்ணிலாப் பாட்டு*

1

"வந்திடுவாய் சந்திரனே!
கீழே நீ வந்திடுவாய்!
என்கண்ணே வந்துடனே
நெற்றியிலே முத்தமிட."

2

மணிப்பெண்ணை மடியிலிட்டுத்
தாலாட்டும் போதினிலே,
தாயுரைத்த மொழியிதனைத்,
தந்தை நான் கேட்டிருந்தேன்.

3

அச்சமயம் வெண்ணிலவும்
புன்னகை தான் புரிந்ததுவே;
நடு வேனிற் பூக்கள் மணம்
மன மகிழச் செய்ததுவே.

4

மாஞ்சோலைப் பறவைகளின்
மாமதுர கீத வொலி,
சோக முள்ளோர் குழலிலெழும்
பாட்டுடனே கலந்ததுவே.

5

மாடியிலே யினிதிருந்து
இவ்விதமே தாலாட்டித்,
தன் மகவை நகையுறுத்தி,
தானும் மிக மகிழ்ந்தனளே.

---

*ரவீந்த்ரநாத் தாகூர் எழுதிய ஒரு பாட்டைத்தழுவி யெழுதியது.

6

வெண்ணிலவின் பேரெழிலைக்
கண்டு மன மகிழ்ந்திடுவாள்;
கையிலுள்ள செல்வத்தை
மார்பணைத்துப் பெரிதுவப்பாள்.

7

வெட்கமிலாச் சந்திரனே!
எவ்விதம் நீ பொறுத்திருப்பாய்?
நின்னையவள் வெறுத்தனளே,
தன் மகவைத் தழுவினளே!

8

இன் மழலைச் சொற்களினால்,
"வந்திடுவாய் சந்திரனே,"
எனக் கூவித் தாயுடனே,
என் மதலை சிரித்ததுவே.

9

தாயுமவள் சிரித்தனளே,
சிரித்ததுவே வெண்ணிலவும்;
கண்டு நின்றேனிக்கனவைக்
காதலுடன் யானுமங்கே.

பன்றியிறைச்சியின் மாட்சி

அநேக நூற்றுண்டுகட்கு முன்னர் மக்கள் இறைச்சியின் மாட்சியினை உணர்ந்தாரில்லை. சிலர் விலங்குகளைக் கொன்று அவைகளின் பச்சை ஊனினைப் பதம் பண்ணத் தெரியாது புசித்து வந்தனர். தன்னூன் பெருக்கற்குத் தாம் பிறிதூனுண்ணும் மக்கள் இறைச்சியினை அவித்தல், வறுத்தல், துவட்டல் முதலிய இன்னோரன்ன முறைகளை உணர்ந்தாரில்லை. ஊனைச் சமைக்கும் வகையை மாந்தர் எவ்வாறு அறிந்துகொண்டனர் என்பதை அடியிற்கண்ட கதையால் விளக்குவாம்:

சீன தேசத்தில் பெகின் என்ற சிற்றூரில் ஆதிரையன் என்பான் ஒரு சிறிய குடிசையில் வசித்து வந்தான். அவன் அநேக நாட்களாக வறுமை வாய்ப்பட்டு வருந்தினன். பன்றிக் குட்டிகளை மேய்த்து வருவதே அவனது தொழிலாகும். ஆதிரையனுக்குப் பத்து வயதுள்ள பகவன் என்றதோர் மைந்தன் உண்டு. பகவன் கூரிய அறிவும் சீரிய உணர்ச்சியும் வாய்ந்தவன். ஆனால் குறும்புத்தனத்தில் அவனினும் ஒப்பாரும் மிக்காருமில்லை என்று கூறுவது புனைந்துரையாகாது. பஞ்ச பூதங்களில் பகவனுக்கு நெருப்பைக் காண்பதில் விருப்பம் அதிகம். அவன் சில சமயங்களில் குச்சிகளையும் குப்பைகளையும் கொளுத்தி அதனாலுண்டாகும் தீயின் தன்மையினைக் கண்டு இன்புறுவான்.

ஒருநாள் ஆதிரையன் தன் பன்றிக்குட்டிகளுக்கு உணவு கொண்டு வருவதற்காக வீட்டைத் தன் மகன் பகவன் வசம் ஒப்புவித்து ஒன்பது பன்றிக்குட்டிகளையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லித் தான் காட்டிற்குச் சென்றனன். தந்தை காட்டிற்குச் சென்றதைக் கண்ட மைந்தன் கழிபேர் உவகை கொண்டு சில குச்சிகளையும் வைக்கோலினையும் ஒன்று சேர்த்து அவைகளைக் கொளுத்தி அதனால் உண்டாகும் தீயின் ஒளியினைக் கண்டு களித்தான். அதுபோழ்து அத்தீயின் ஒரு

சிறு பொறியானது குடிசையிற் புக குடிசை முழுவதும் பற்றி எரிந்தது. குடிசையிற் தீப்புகுந்ததைக் கண்ட பகவன் வெளியே வந்துவிட்டான். சிறிது நேரத்திற்குள் குடிசை சாம்பலாய்விட்டது. இதைக் கண்ட பகவன் மிகவும் வருந்தினன். அவன் குடிசையை இழந்ததற்கு வருந்தவில்லை. ஏனெனில் அவன் இதற்குமுன் தன் குறும்புத்தனத்தால் இரண்டு குடிசைகளை தீவாய்ப்படுத்தியுள்ளான். ஆனால் அவன் "அந்தோ பன்றிக்குட்டிகளைப் பறிகொடுத்தேனே" என்று கதறினன். தன் தந்தையின் வெகுளியினைக் கணமேனும் காத்தலரிது என்றுணர்ந்த மைந்தன் "அந்தோ பால்மணமாறாத இளம் பன்றிக்குட்டிகளை இழந்தேன், எந்தை என்னை ஒறுப்பரே; யான் யாது செய்வேன்" என்று வருந்தினன்.

அது போழ்து அவன் அக்குடிசையின் பக்கத்தில் ஒரு நறுமணம் வீசக்கண்டான். அந்த நறுமணம் எக்காரணத்தாலாயதென்றும் எப்பக்கத்தினின்று வீசுகின்றதென்பதையும் பகவன் உணர்ந்தானில்லை. அவன் அக்குடிசையின் முற்பக்கம் பிற்பக்கம் மற்ற நாற்பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தான். பார்த்தும் பயனில்லை. தான் பிறந்ததுமுதல் இதுவரையில் பகவன் இவ்வித நறுமணத்தைக் கண்டானில்லை. அச்சிற்றூருக்கு அது ஒரு புத்தம் புதிய நறுமணமாகத் திகழ்ந்தது.

பிறகு பகவன் பன்றிக்குட்டிகளின் அருகே சென்று அவைகள் ஆவி அகத்ததோ புறத்ததோ என்பதை உணர வேண்டி அவைகளின் உடலைச் சிறிது தொட்டான். தொட்டவுடன் தீப்பற்றிய குடிசையிலிருந்த பன்றிகளின் உடல் நன்றாக வெந்திருந்தபடியால் அவைகளின் கொழுப்பும் தசையும் பகவன் கையில் ஒட்டிக்கொண்டன. சுட்ட ஊனின் வெப்பத்தைத் தாங்கமாட்டாத பகவன் தன் விரல்களைத் தன் வாயில் வைத்துக்கொண்டான். உடனே அவன் சுட்ட ஊனின் சுவையினை உணர்ந்தான். இதுகாறும் அக்குடிசையில் வீசிய நறுமணம் சுட்ட பன்றியிறைச்சியின்பாற்பட்டது என்பதை அறிந்துகொண்டான். இதுவரையில் அச்சிற்றூரில் வெந்த ஊனினைக்

147732
சென்னை-600 008.

கண்ட மக்கள் ஒருவருமில்லை. முதல் முதல் அச்சிற்றூரில் சுட்ட பன்றியின் சுவையை யுணர்ந்த பகவன் கொண்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவன் குதித்தான். ஆடினான். "நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் சுடு பன்றி இறைச்சியின் மாட்சி" என்று பாடினான். பிறகு அப்பன்றியின் ஊனை அள்ளியள்ளி உண்டு களித்தான்.

காட்டிற்குச் சென்ற ஆதிரையன் வீட்டிற்குத் திரும்பி வந்து குடிசை சாம்பலாகிய நிலையினையும் இழிவறிந்து பன்றியின் ஊனுண்ணும் கழிபேர் இரையாளுகிய மைந்தனையும் கண்டு வெகுண்டு அவனைத் தடியால் நையப் புடைத்தனன். அவன் அடித்த அடி சுட்ட பன்றி ஊனில் திளைத்திருக்கும் பகவனுக்கு ஈ மொய்த்ததுபோன்றிருந்தது. அவன் தன் தந்தை வந்ததையும் கண்டானில்லை.

ஆதிரையன் :—அடே, மிருகமே! அங்கே என்ன செய்கின்றாய்? இதுகாறும் மூன்று குடிசைகளை அழித்தது போதாதென்று கருதியோ இக்குடிசையினையும் தீவாய்ப்படுத்தினை.

பகவன் :—என் அருமைத் தந்தையே! ஆஹா! என்ன அருமை என்ன அருமை! இப்பன்றிகளின் அமிழ்தினுமினிய சுட்ட இறைச்சியினை யான் என்னவென்று கூறுவேன். தயவு செய்து தாங்கள் இச்சுட்ட ஊனினைச் சாப்பிடுங்கள்.

ஆதிரையனுக்கு அடங்காக் கோபம் பொங்கி வந்தது. அவன் மறுபடியும் தன் மைந்தனின் இராக்ஷச குணத்திற்கு வருந்தி அவனை மீண்டும் வைதான். தான் பெற்ற இன்பம் தன் தந்தையும் பெறுதல்வேண்டுமென்ற பேரவாக்கொண்ட மைந்தன் அதிக சூடாக உள்ள அப்பன்றி ஊனினை அதிக விரைவுடன் தன் தந்தையின் விரல்களில் மோதினன். ஆதிரையன் உடனே திடுக்கிட்டு அவ்வூனைக்கொண்ட விரலின் சூட்டைத் தாங்கமாட்டாது யாது செய்வதென்று தெரியாது வருந்தினன். பிறகு அவனுக்கு ஒரு யுக்தி பிறந்தது. அவன் விரல்களைக் குளிர்ச்சி செய்யும்வண்ணம் வாயில் வைத்துக்கொண்டான்.

இதுகாறும் பன்றியின் வறுத்த ஊனின் தன்மையைக் கனவிலும் கண்டும் கேட்டுமறியாத ஆதிரையன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவன் தன்னை மறந்தான். தன் உடலையும் மறந்தான். சுருங்கக்கூறுமிடத்து இவ்வுலகத்தையும் மறந்தான். பிறகு மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனும் அவன் மைந்தனும் பன்றியின் சுட்ட ஊனின் சுவையை உண்டு களித்தனர்.

அக்காலத்தில் அச்சிற்றூரிலுள்ள மக்கள் அனைவரும் பச்சை மாமிசத்தையே புசித்து வந்தனர். அங்கிலையிலுள்ள மாந்தர் வறுத்த மாமிசத்தின் மணத்தையும் தன்மையையும் உணரார். ஆகவே ஆதிரையனும் அவன் மகனும் பன்றியைச் சுடும் வகையை அச்சிற்றூரிலுள்ள மற்ற மக்களுக்கு உணர்த்திஞரில்லை.

தீப்பற்றிய வீட்டிஞல் தான் பன்றி இறைச்சியைச் சுட்டுத் தின்னலாம் என்று கண்ட தந்தையும் மைந்தனும் அடிக்கடி தங்கள் குடிசையில் பன்றிக்குட்டிகளை உள்ளே அடைத்து குடிசையைக் கொளுத்திவிட்டு வெளியே வந்து குடிசை முற்றும் எரிந்தபின் உள்ளே சென்று பன்றிகளின் வெந்த ஊனினைத்தின்று மகிழ்ந்து வந்தனர். இவ்வாருக அவர்கள் தாங்கள் குடியிருந்த குடிசையில் பன்றியை உள்ளேவிட்டு அக்குடிசையினைச் சிலமுறை பகலிலும் பலமுறை இரவிலும் தீவாய்ப்படுத்தி அதனுல் உண்டான பயனைப் பெற்றனர். வீடுபற்றி எரிந்தால்தான் பன்றியின் ஊன் பதமாகும் என்றதோர் நூதனமுடிவை அவர்கள் கண்டுபிடித்தனர்.

இவர்கள் குடிசை இவ்வாறு பலமுறையும் தீவாய்ப்படுவதைக்கண்ட மற்ற மக்கள் ஆதிரையனும் அவன் மகனும் செய்துவந்த காரியத்தை ஒருநாள் கண்டுபிடித்து விட்டனர். உடனே அவர்கள் ஆதிரையன் செய்யும் காரியம் அடாது என்று கூறி அவனையும் அவன் மகனையும் நீதி மன்றத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அன்றையதினம் ஊரிலுள்ள மக்கள் அனைவரும் வேடிக்கைப் பார்ப்பதற்காக நீதி மன்றத்தில் வந்து நிறைந்தனர். குறித்த நேரத்தில் நீதிபதியும் தன் இடத்தில் வந்து அமர்ந்தார். நீதிபதி தான் தீர்ப்புச்சொல்லும் முன்னர் ஆதிரையன் குற்றவாளியோ அல்லனோ என்பதை அங்குள்ள ஜூரிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டார். அங்குள்ள ஜூரிகளுள் ஒருவர் அச்சுட்ட பன்றியின் ஊனினைப்பார்த்து அதிலுள்ள குற்றத்தைக் கண்ட பின்னரே தீர்ப்பு சொல்லுவது சாலச்சிறந்தது என்றார். அவ்வாறே ஜூரிகள் அனைவரும் பன்றியின் சுட்ட ஊனினைத்தொட அச்சூட்டினைத் தாங்கமாட்டாத தங்கள் விரலினை அவர்களும் குளிர்ச்சி செய்யும்வண்ணம் தங்கள் வாயில் வைத்துக்கொண்டனர். அவர்களும் சுட்ட இறைச்சியின் மாட்சியை உணர்ந்தனர். உடனே அவர்கள் ஆதிரையன் குற்றமற்றவன் என்று நீதிபதியிடம் கூற அவரும் அவ்வாறே தீர்ப்பு கூறினர்.

ஜூரிகள் அனைவரும் ஆதிரையன் குற்றமற்றவன் என்று ஒரே துணிவுடன் சொல்வதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமென்று நீதிபதி யூகித்து அறிந்துகொண்டார். பிறகு அவர் ஒரு தனியிடத்திற்சென்று அந்த சுட்ட இறைச்சியினைத் தானும் தொட அச்சூட்டினைப் பொறுக்கமாட்டாது தானும் தன் விரல்களைக் குளிர்ச்சி செய்யும்வண்ணம் வாயில் வைத்துக்கொண்டார். உடனே அவரும் சுட்ட ஊனின் உண்மையையும் தன்மையையும் அறிந்து வீட்டை எரித்தால்தான் பன்றியின் ஊனைச் சுட்டுத் தின்னலாம் என்ற முடிபையும் அவர் அறிந்துகொண்டார். மறுநாள் நீதிபதி வீட்டிலும் தீப்பற்றி எரிந்தது. அவரும் தன் வீட்டில் பன்றியை உள்ளே வைத்து வீட்டைக்கொளுத்தி அதினாலுண்டாகிய சுட்ட பன்றி இறைச்சியை உண்டு உவந்தனர். வீட்டைச் சுட்டால்தான் பன்றியின் வறுத்த ஊனினைத் தின்னலாம் என்பதை அச்சிற்றூரிலுள்ள மக்கள் அனைவரும் அறிந்துகொண்டனர். அன்று முதற்கொண்டு அவ்வூரில் ஒவ்வொரு வீடும் பற்றி எரிந்தது. பிறகின்

விலையும் பன்றிக்குட்டிகளின் விலையும் உயர்ந்துவிட்டன. இன்சூரன்ஸ் ஆபீஸ்களெல்லாம் மூடப்பட்டன. ஏனெனில் இன்சூரன்ஸ் ஆபீஸ் அதிகாரிகள் எல்லா மக்களுக்கும் ஒரே காலத்திற் பணம் கொடுக்கமுடியவில்லை. ஒவ்வொருநாளும் சுமார் ஐம்பது வீடுகள் தீவாய்ப்பட்டன.

பிறகு கொஞ்சநாட்கள் சென்றவுடன் ஒரு முனிவர் அச்சிற்றூருக்கு வந்துசேர்ந்தார். அவர் அவ்வூரிலுள்ள மக்களுக்கு பன்றியின் இறைச்சியையும் இன்னும் மற்ற விலங்குகளின் இறைச்சியினையும் சுடும் விதத்தினை எடுத்து விளக்கினர். பன்றி இறைச்சியினைப் பதம் செய்வதற்கு ஒரு வீட்டை முழுவதும் எரிக்கவேண்டியது அவசியமில்லையென்றும் அடுப்பில் வைத்து ஊனைச் சுடலாமென்றும் கூறி அம்மக்களுக்கு அறிவுறுத்தினர். பின்னர் நாகரீகம் முற்றியவுடன் எல்லா மக்களும் பன்றி இறைச்சியினையும் மற்ற விலங்குகளின் இறைச்சியினையும் எம்முறையில் வறுத்தல் சமைத்தல் துவைத்தல் முதலிய இன்னோரன்ன முறைகளை உணர்ந்துகொண்டனர்.

என்னே! பன்றிக்குட்டி இறைச்சியின்மாட்சி! பன்றிக் குட்டிகளின் அழகே அழகு. அவைகளுக்குப் பொய் சொல்லத் தெரியாது. புறங்கூறத் தெரியாது. அவைகள் யானைக் குட்டிகள்போல் நடக்கும் நடையினை வியவாதார் உளரோ! இதுகருதிபோலும் பரமசிவனும் பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து பன்றிகட்கு அருள்சுரந்து தான் பன்றி உருவம் கொண்டு பன்றிக்குட்டிகட்குப் பால் கொடுத்தனர். (இக்கட்டுரை Charles Lamb அவர்கள் எழுதிப்போந்த "A dissertation upon roast pig" என்பதைத் தழுவியது.)

P. ALALASUNDARAM,
V Hons. Tamil Literature.

தலைப் பெயல்

(ராமுடு)

உலகம் வளைஇய அலைகடல் பருகி, வலனேர்பு எழுதரும் விரைசெல வெழிலி, நீர்செலநிமிர்ந்த மாஅல் போல ஒளிநிறை வானத்து இருள் நிறைவித்து, பொன்னொளி புரையும் மின்னொளி தோற்றி, மாதிர மதிரஉருமிடி முழக்கி, நிலத்தின் வாழ்நர் நலத்தினை எய்த, புலத்துறை முற்றிய புரையோர் போல பயனெதிர் பாராது, கார்காலத் தொடக்கத்தில், தலைஇயது. கொம்புகள் பூத்தன ; குருகுகள் ஆர்த்தன.

வேங்கை வீயுகும் ஓங்குமலைக்குறிஞ்சியில், சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பெய்த பெயலைக் கண்டு மட நடைமஞ்ஞை மகிழ்ந்தாடியது. மாயோனன்ன மால் வரைக் கவான், வாலியோனன்ன வயங்கு வெள்ளருவி மிக்க ஓசையுடன் சேணின்று இழுமென்றிழிந்தது. நாண் மழை தலை இய நன்னெடுங் குன்றத்து, காந்தளூதிய மணி நிறத்தும்பி தீந்தொடை நரம்பின் தேம்பட முரன்றது. விடியல் வெங்கதிர் காயும் வேய் மல்கு அகலறையின்மீது பொன்னிறத்துடன் போர்த்து நின்ற வேங்கை நுண்தாது மூங்கிலீன்ற முத்துக்களோடு, அகில்சுமந்து ஆரமுழுமுதலுருட்டி வந்த அருவியுடன் சென்றது. விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த தண்கமழ் அலரிறாலும் சிதைந்து இவற்றைத் தொடர்ந்தது. நாக நறுமலர் உதிர்ந்தது ; யூகமொடு மாமுக முசுக்கலைபனித்தது ; கறிக்கொடி கருந்துணர் சாய்ந்தது. ஆமா உகண்டது. இனமான் வெருண்டது. இவற்றிடையே, இற்செறிவுற்றதால் இடும்பை எய்திய தன் இளமகள் முருகன் அணங்கு கொண்டாளென ஐயுற்று வேலனை வெறியயரவேண்டினாள் நற்றாய். அவனும், இருள்படப் பொதுளிய புதுப்பூங்கடம்பின் அடியில், பூசை யிடுவித்து "ஞாயிற்றோர் நிறத்தகை! நளினத்துப் பிறவியை! காஅய்க்கடவுட்சேய்! செவ்வேள்! சால்வ! தலைவன்" எனப் பேஎ விழவி

னுள் ஏத்தினன். அச்செயல் "வாயும் அல்ல; பொய்யும் அல்ல" எனப் புலவர் மயக்கமுற முருகன் வெறியாட்டுவித்தான். இதனைக்கண்ட தோழி "எம் தலைவன் குன்ற நாடன் மார்பு தர வந்த படர் மலி அருநோய் நின்னணங்கன்மை அறிந்தும் அண்ணாந்து கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி வேலன் வேண்ட வெறிமனைவந்தோய்! கடவுளாயினுமாகுக மடவை மன்ற வாழிய முருகே!" என முருகனை எள்ளினள். பின் தலைவன் வரைவு கோட தலைவியின் அணங்கு அகன்றது.

அரும்பு பொதிவாசம் சுரும்பு தூற்றலினால் சிறுவீ முல்லை பெரிதுங் கமழும் முல்லை நிலத்தை நோக்குவாம். ஈண்டு முதுவேனிலில் செங்கதிர்ச் செல்வனது வெப்பம் தாங்கொணாதது. குடியலைக்கும் கொடுங்கோலன் ஒழிய தண்ணருள் வேந்தைத் தாமெதிர்கொள்ளும் குடிகள்போன்று கோவலர் கார்காலத்தை எதிர்கொண்டனர். "அழிவிலர்முயலும் ஆர்வ மாக்கள் வழிபடு தெய்வம் கட்கண்டாங்கு," வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறி தலைப்பெயல் தலைஇ மகிழ்ந்தனர் கோவலர். கொன்றையந் தீங்குழல் மன்று தோறியம்பியது. காமருதகைய கானக்கோழி, பெயனீர் போகிய வியனெடும்புறவில் புலராவீர் மணல் மலிரக்கிண்டி, நாளிரை நாங்கூழ் தானுண்டுவந்து, பெருந்தகைமையோடு தன் பெடை நோக்கியது. புன்செய் நிலமும் கொழுமுனை தொடுமுனம் கூசிப் பயிர் மயிர் சிலிர்த்தது. மகளிர் வரகு களையெடுக்க விரைந்து சென்றனர். இளைஞர் ஏறுகோட இசைந்தெழுந்தனர். கறவை கன்றூர்த்திக் கலநிறை பொழிந்தது. கொன்றை தளிர்த்தது. காயாபூத்தது. குருவிகள் இயம்பின. இவ்வாறு பல்லுயிரும் மகிழ்ந்திருக்கப் பெண்ணொருத்தியின் மேனிமட்டும் பசலையூர்ந்தது. பண்டு, மோர்க்கு எளியாளை வெண்ணெய்க்கு எளியளெனக் கண்டவாறு, கிளவிக்கெளிய தன்னைக் கலவிக்கெளியளாய்க் கண்ட தலைவன் இன்று குறித்தநாளெல்லை இகந்தும் வாராமை கண்டு, வருந்தி தலைவிதோழியை விளித்து "அம்ம! வாழி தோழி நம் காதலர் நிலம்புடை பெயரினும் கூறிய சொற்புடை பெயர்பவ

ரலரே. நளிகடன்முகந்து காரும் நாற்புறமும் இருள் செறிதகப் பெயல் பொழிந்தது. எம் காதலர் வரக்காணேன். கொல்லைக்கோவலர் எல்லிமாட்டிய பருமர வேரடிபோல அருளிலேனம்ம! அறியேன்யானே!” என்றாள். இம்மாயோள் இருந்ததேஎ நோக்கி வியலிரு விசும்பகம் புதையப்பாஅய், பெய்யா வானம் பெயல் தொடங்கவே, தான் கூறிச்சென்ற நாளெல்லை இகந்தது கண்ட தலைவன் தன் சொற் காக்க விரைந்தான். அவன் வருமுன், அழல்தொடங்கினளே ஆயிழை; அதனெதிர் குழல் தொடங்கினரே கோவலர்; அதன்வழி குரவை தொடங்கினரே ஆய்ச்சியர்.

இனி, முல்லையும் குறிஞ்சியும் முறை பிறழ்தமைந்ததும், ஆரிடை அத்தத் தியங்குநரல்லது மாரி வளம் பெறா வில்லேருழவர் கூற்றுறழ் முன்பொடு ஆறலைப்பதுமாய பாலை நிலத்தினும் தலைப்பெயல் சிறிது தன் தண்ணளி சுரந்தது. ஆயினும் அந்நிலத்தில் தங்கிய ஈரமும், அம்மறவர் நெஞ்சினில் தங்கிய ஈரமும் ஓரொத்தன. அலர்தலை மராமும் உலறுதலை ஓமையும் வேட்கையொடு நீரை உண்டன; பூமுகிழ்த்து தம் மகிழ்ச்சியைக் காட்டின. நீர் நசைகொண்ட நெடுங்கண் மானினம் அண்ணாந்து வாய் திறந்து வள்ளுறை உண்டு மகிழ்ந்தன. வறண்ட சுனையும் சிறிது ஊற்றெடுத்தது. மறக்குடி எயினர் கொற்றவைக்குப் பூசையிட்டனர். ‘ஆனைத்தோல் போர்த்துப் புலியினுரிஉடுத்து கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்ற’ பாவையைப் பலவாறாக ஏத்தினர். பிரிந்த மகளிர் பேதுறும் உள்ளம் வெதும்புவதுபோன்று அவ்வருஞ்சுரம் மறுபடியும் வெய்யதாயிற்று.

நிற்க, தயங்கிதழ்த் தாமரைத் தண்பணைத் தழீஇய மருத நிலத்தில் பெய்த மழைத்துளிகளில் பல, தாமரைக் கொடியின் காமரும் இலைகளின்மீது, ஆரமறுந்து சிந்திய ஆரங்கள் போன்றுதுயின்றன. அவற்றின் பற்றற்ற தன்மை இல்லறமோம்பினும் இறைவனிடம் மாறா உள்ளமுடையோரின் பெற்றியை ஒத்தது. ஆற்று நீரும் பெயல் நீரும் ஒன்றுபட்டு ஓவி

றந்து ஒலித்தன. இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் தம்முழ விடை விளைவிக்கும் உழவர் உழுதசேற்றில் கள்வாய் நீலம்போலும் கண்ணினராய கடைசியர் நாற்று நட்டனர். பரத்தையர் இல்லம் சென்று திரும்பிய தலைமகன், வழிமுழுதும் தலைவியின் ஊடல் தீர்ப்பான்வேண்டி ஓர் புரைதீர்ந்த பொய் புனைய நினைந்தான். வாய்மைபிறழாத் தலைமையுடையோனாதலின், அது அவனுக்கு ஏலாதாயிற்று. அக்காலை, தலைப்பெயல் அவனுக்கொரு தோன்றாத் துணையாக வர, அவன் மகிழ்ந்து கூறுவான்: 'நீடு வாழிமாமழை! மாண்டநின் தன்னலமில்லாத் தலையளி சிறக்க! காவாச்சினத்த வாயின்மறுக்கும், தோழியும் அவடன் துணைநலத் தலைவியும் வினாதற்கு விடையிறுக்க, ஆனதேனுக் கருந்துணையாயினை' தலைவியோ 'நம்பீடுகெழுதலைவன் பரத்தையொடாடிப் பாடழிசாந்தினன் பண்பின்றிவரின் ஊடுவன் யான்' என உறுதிபூண்டாள். தலைவன் வாயில் வேண்ட தோழி மறுத்தாள். அதற்கவன் 'யாணர்த்தலைப்பெயலினால் காலந்தாழ்த்த' தென்றான். 'ஆகத்திருந்த அணிபெறு சாந்து அழிந்ததே' னெனத் தோழி வினவ, 'அதுவும் பெயலில் நனையப்போந்த பய'னெனப் புனைந்துரைத்தான். இதற்குள் தலைவியின் நெஞ்சம் நெகிழ்ந்தது. அவளது உறுதி சென்று ஒளித்தவிடம் அறியோம். அவள் ஊடுவேனென, நெஞ்சம் கூடுவேம் என்றது. அவள் புலப்பேனென்றாள்; உள்ளம் கலப்பேமென்றது. தலைவி துனிப்பேனென்றாள். நெஞ்சு தனித்தே தாழ்ந்தது. தலைவி இளிவந்து தோழியிடம் கூறுவாள்: "பிறை புரையேர் நுதால்! அறைபோகும் நெஞ்சையுடைய மகளிர்க்கு தாம் எண்ணியவாறெல்லாம் துறை போதலொல்லுமோ? ஏலாது." ஊடல் நீத்தனர்; உவகை பூத்தனர்.

புணரி பொருத பூமணை லடைகரை நெய்தலங்கானலில் தலைப்பெயல் பொழிய, அளையில் நீர் புக அலவன் வெளியேறியது. சுறவுகோட்டன்ன முடங் கிதழ் தாழையின் முள் நிறை நறும்பூக்களெல்லாம் யாணர்ப் புதுப்புனல் ஆடிய மகளிர்போல் விளங்கின. புன்னையந்தாதும் தண்ணீருடனே அலைகடலிற்

சென்று மறைந்தது. செவ்விய சுரும்பும் செவ்வழி பாடியது. நீர்கிறக்காக்கை இருஞ்சிறை நனைந்த ஈரம்புலராது அவற்றை உரம்பெறு அலகால் கோதி உலர்த்திற்று. உமணர் அமைத்த உப்பினமெல்லாம் குடியலைத் தீட்டிய குவிபொருள்போல ஒருங்கேசேர்ந்து மருங்கற மறைந்தது. கடலுட் பெய்த மழை நீரும் செல்வர்க்கீந்த கையுறைபோன்று பயனற்றதாயிற்று. கண்டல் வேலிக் கழிசூழல் படப்பையில், சிறுவீ நறுஞாழலேந்தி எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்குமோடும் கறைகெழுவேற் கண் மடவாள் பெயலைக் கண்டு, மீனுணங்கல் காத்து புள்ளோம்புதலைக் கைவிட்டாள். ஆதலின் அவளை நாடோறும் கண்ட தலைமகன் காணாது, “கள்வாய் நீலம் கையிலேந்திப் புள்வாயுணங்கல் கடிவாள் செங்கண், வெள்வேலல்ல; அவை இன்னும் வெய்ய வெய்ய” என ஆற்றாமை கூறினான். தலைவியோ தோழியிடம், கைதைவேலிக் கழிவாய் வந்தெம்பொய்தலழித்துப் போனாரொருவர்; பொய்தலழித்துப் போனார் அவர் நம், மையன் மனம் விட்டகல்வாரல்லர்” என்றாள். கண்டல் வேலிக் கானலில் கண்டதும் காதல் தோன்றிற்று.

இங்ஙனம் பெய்த தலைப்பெயல் ஒரே பெற்றியது. ஆனால் அதை ஏற்றவகைகள் பலதிறத்தன. ஐந்திணை மக்களும், மாவும், மானும், புள்ளும் பிறவும் போற்றி உய்ந்த முறைகள் பல. இறைவன் இன்னருள் ஒரே திறத்தது. மன்னுயிர்கள் அதை ஏற்றுய்யும் முறைகள் பல் திறத்தன. எத்திறமும் நற்றிறமே; எம்முறையும் நன்முறையே.

வாழிய தலைப்பெயல்! வாழ்க இன்னருளே!

வா. நா. ராமசாமி,

III வகுப்பு.

Athletic Association

The following have been elected Captains for the year :—

1.	Badminton Club	D. Manickam, IV Cl.
2.	Basketball ,,	K. M. Matthew, II Cl.
3.	Cricket ,,	M. Runganadhan, III Cl.
4.	Gymnastics ,,	R. N. Ramachandran, III Hons.
5.	Football ,,	N. Muthuswamy, II Cl.
6.	Hockey ,,	Kotiswara Rao, V Hons.
7.	Playgroundball Club	M. S. Govindaswamy, IV Cl.
8.	Tenikoit ,,	S. Sitaraman, IV Year Siromani.
9.	Tennis ,,	Veeraraghava Rao, V Hons.
10.	Track & Field ,,	R. Vasudevan, II Cl.
11.	Volleyball ,,	Mahadevan, IV Cl.

Among the new-comers to the University the following students give promise of distinguishing themselves :—

K. Subramanyan from Madras, a useful left-hand bowler in Cricket and a good left-out in Football.

C. V. Ganapathy from Calicut is likely to do well as a right-half in Hockey.

M. Samson Daniel, A. Bhaskaran and N. P. Krishnamurthy are three welcome additions to the Track and

OUR WINNING TEAMS & CAPTAINS '32-33

PLAY GROUND BALL

BADMINTON : FIVES & DOUBLES

BASKET BALL



CAPTAINS : 1932-'33



Field Club. Samson has had a good athletic record in Travancore and A. Bhaskaran was fourth in the Hop, Step and Jump event in the last Madras Olympics. All three are first-rate Volleyballers, Samson coming in a class by himself. We wish these athletes success in the year's endeavours.

As for the activities during the term, the Cricket Club has been working most vigorously and apart from three practice matches, three fixtures with the Madras clubs (Mr. C. Ramaswami's Eleven, Sir Ashley Bigg's Institute, the Minerva) have been played so far. The Varsity Team is this year being captained again very creditably by Mark Runganadhan whose free style of play and marked improvement have attracted the attention of all visiting teams. Among the most distinguished in the visiting teams may be mentioned the brothers Messrs. C. Ramaswami and H. Venkataramanujulu, Prof C. Krishnaswami Pillai of the Presidency College, Nainakkannu of Sir Ashley Bigg's Institute, Ram Singh, the Presidency Bowler-Batsman, S. V. Thiruvenkatachary, the Varsity and Madras Wicket-Keeper and C. D. Parthasarathy, the Hony. Secretary of the Indian Cricket Federation.

The Hockey Club played with all the visiting Cricket and Hockey teams; and the Varsity team has done creditably considering the strength of the visiting sides. Prominent among those who visited us were Janardhanan, Nainakkannu, Chandrasekharan, Anthony, C. D. Parthasarathy and Mahadevan.

The Tennis Club gives promise of success, Mark Runganadhan having considerably improved; but during the match with C. Ramaswami and Partner, it

is regrettable that I. P. Muralidhara Menon dislocated his knee-cap and we fear that he will be out of serious Tennis for many weeks.

The Volleyball Club played a match with the Sir Ashley Bigg's and won very comfortably. The Badminton achieved a similar success in a match against the Minerva. The Volleyball and Badminton Clubs have really good teams.

REPORTS

University Union

President :

M.R.Ry. Rao Bahadur S. E. Runganadhan Avl., M.A., I.E S.

Chairman :

Mr. S. Muthukumaraswamy, V H. (I Term)

Secretary :

Mr. S. Ganapathy Subramanian, IV H. ('33-'34)

The valedictory address for last year was delivered by Sir K. V. Reddy on the occasion of the Union day held on the 12th February, the Vice-Chancellor presiding.

The Union has begun its activities with vigour this year. A few alterations in the rules of the Union to render its proceedings more parliamentary have been effected. A prize is instituted for the best debator in the Union, to be awarded on the merit of speeches made in the ordinary meetings. A Mock Parliament and an Impromptu Debate, will, it is hoped, with the


Our Winning Teams
HOCKEY
CRICKET
FOOTBALL
VOLLEY BALL
TENNIS
1932 - 1933

co-operation of enthusiastic members, be *faits accomplis* in the near future.

The inaugural address was delivered on the 29th July by Dr. Eleanor McDougall, M.A., D.Litt., with Prof. Srinivasachariyar, M.A., in the chair. The subject "Social life within a University" attracted a large audience.

The following resolutions were discussed in the ordinary meetings:—That

(1) World Progress is a Myth.

(2) The last remnants of Democracy ought to be removed.

(3) The Conference method is a failure in practical politics.

(4) The institution of marriage is a failure.

(5) We could progress better with social feelings amongst mankind rather than with belief in an overruling Providence.

All resolutions except the last, were lost.

An extraordinary address was delivered by Mr. Nightingale, B.Sc., of the Malaya Colonial Service.

The secretary begs to acknowledge the help and encouragement he has received from the President and the managing committee.

Annamalai University Tamil Sangam

Patron :—M.R.Ry. Rao Bahadur
S. E. Runganadhan Avl., M.A., I.E.S.

President :—M.R.Ry. R. P. Sethu Pillai Avl., B.A., B.L.

Chairman :—Mr. D. Manickam (III Term 1932-'33).
Mr. K. Palaniswamy, IV Vidwan,
(I Term 1933-34.)

Secretary :—Mr. P. Alalasundaram (1932-33).
Mr. S. Rudnapathi, B.A., V Hons.
(1933-'34).

The Anniversary of the Tamil Sangam for the year 1932-'33 was celebrated on Sunday the 19th February 1933, the Vice-Chancellor presiding. M.R.Ry. T. S. Nataraja Pillai Avl., B.A., B.L. delivered the valedictory address on "The Dramatic Beauty of Kamban."

The inaugural address of the Sangam was delivered by Swami Vipulanandaji Maharaj B.Sc. (London) on 12th July 1933 when M.R.Ry. S. E. Runganadhan Avl., M.A., I.E.S., presided. The lecturer in the course of his address dwelt on some of the social and religious problems that confront India.

An extra-ordinary meeting was held on 30th July '33 with the President in the chair, when Dr. P. Varadarajalu Naidu, Editor of the "Tamil Nadu", delivered an interesting lecture on "National Life."

In the ordinary meetings the following subjects were discussed, that (1) Students should partake in

politics. (2) The modern stage is of no use. (3) Translation from other literatures is detrimental to Tamil. (4) Ruling the people by laws is not in conformity with Nature.

The Sangam passed resolutions expressing its sorrow at the sudden death of Mr. Narasinham II Vid. Mr. Gopalan I-Vid. and Mr. Seshadri I Class.

The History Society 1933–34

President :—Prof. C. S. Srinivasachariar, M.A.

Chairman :—Mr. K. Venkatachalam, IV Class (I Term).

Secretary :—Mr. K. C. Govindarajan, IV Hons. (1933-34).

The valedictory address of the History Society for the year 1932-33 was delivered on the 24th February 1933 by the Rev. Father P. Carty, S.J., B.Sc., D.D. Professor, St. Joseph's College, Trichy., on "Is History going to repeat itself," when the Vice-Chancellor presided.

During this term, four ordinary meetings were conducted in which were discussed many interesting subjects.

Mathematics Association

President :—M.R.Ry. A. Narasinga Rao Avl., M.A., L.T.

Vice-President :—M.R.Ry. G. V. Krishnaswamy Ayangar Avl., M.A.

Secretary :—Mr. S. Nageswaran, IV Hons. (1933-'34).

Additional Secretary :—Mr. A. George, IV Hons. (1933-34)

A special feature of the Association this year is that ordinary meetings are presided over by the staff members.

The Association has already begun its work for this year. Two ordinary meetings have been held, in one of which Mr. P. Jeganathan, V Hons. spoke on "Waring's Problem," and in the other Mr. V. T. Srinivasan, V Hons. gave a very interesting lecture on "Transfinite Numbers." The President has decided to award a prize for the best paper read before the Association.

Philosophy Society

President :—M.R.Ry. R. Ramanujachariar Avl., M.A.

Chairman :—R. Mahadevan, III Hons.

Secretary :—G. Pattabiraman, IV Hons.

The inaugural address for the last year was delivered by Prof. Wadia of the Mysore University on "The Message of Philosophy". M.R.Ry. P. N. Sreenevasachariar Avl., M.A. of the Pachiappa's College presided on that occasion. Twelve ordinary and three

extra-ordinary meetings were held. Mr. Krishnamoorthy Sarma from the teaching staff took part in one of the meetings. The valedictory address was delivered by Dr. Seshagiri Rao, M.A., Ph. D. on "Philosophy and Artistic Activity."

Annamalai University Social Reform Club

President :—M.R.Ry. Rao Bahadur
S. E. Runganadhan Avl., M.A., I.E.S.

Vice-President :—Dr. B. V. Narayanaswamy Naidu,
M.A., Ph. D., B. Com.

Chairman :—Dr. B. V. Narayanaswamy Naidu,
M.A., Ph.D., B. Com. (III Term)
Mr. C. R. Myleru, M.A.,
(I Term of the academic year 1933-34.)

Secretary :—T. Govinda Rajan, V Hons. (1932-33.)
N. Ganapathy IV Hons. (1933-34.)

Rural Propaganda Committee

1. Mr. R. Ekambaram, IV Vidwan.
2. „ K. Palanisamy, IV Vidwan.
3. „ A. Muthu Sivan, IV Hons.
4. „ S. Arumuga Mudaliar, B.A., L.T., IV Hons.
5. „ M. Thiaga Raja Nayanar, IV Class.

The Night School Committee

1. Mr. S. Ganapathy Subramanyam, IV Hons.
2. „ J. Narayanaswamy, IV Hons.
3. „ C. R. Sankaran, III Hons.
4. „ P. Jothimuthu, B.A., IV Hons.
5. „ S. Ramanathan, III Hons.

The Executive Committee

1. Mr. S. Ganapathy Subramanyam, IV Hons.
2. ,, S. Arumuga Mudaliar, B.A., L.T.
3. ,, Peer Mahammad, III Hons.
4. ,, C. Jaganathachary, V Hons.

Treasurer :—B. Ragunath Hegde, IV Hons.

Consequent on the adoption of the new constitution last year the number of members has shown an increase, and greater interest has been evinced in the activities of the club. Two meetings have already taken place. Mr. C. R. Myleru, M.A., considered the problem of Eugenics and Birth control in the first meeting; and Mr. J. Narayanaswamy, IV Hons. gave a discourse on "Social regeneration and its bearing on industrial development."

The Annamalai University

Students' Co-operative Stores Ltd.

We are glad to say that the Stores has been working satisfactorily. This is not a little due to the sympathy and co-operation of the University and Hostel authorities. We have started a "Second-hand books department" which promises to be very popular. Our transactions were a little over a lakh of rupees last year, and our profits about one thousand five hundred rupees.

Our old grievance, the need of a 'pucca' building to house the stores still continues. We again appeal to the authorities of the University for redress. We request all the members of the University to become members of the Stores and to buy their things from us, to their own profit.

C. R. MYLERU.

Secretary.

OFFICE-BEARERS

President :—

M.R.Ry. Rao Bahadur S. E. Runganadhan, M.A., I.E.S., Vice-Chancellor.

Vice-President :—

M.R.Ry. C. S. Srinivasachari, M.A.,

Secretary.

C. R. Myleru.

DIRECTORS

Dr. B. V. Narayanaswami Naidu, M.A., Ph.D.

Mr. A. C. Subramanian, M.A.

Mr. A. Narasinga Rao, M.A.

Mr. N. Ganapathi, IV Hons. (Econ.)

Annamalainagar Rover Crew. Annual Report for 1932-33

The following were the office-bearers during the year under review:

Mr. T. P. Navanithakrishna	*Rover Leader.*
,, S. Sankaranarayanan	*Senior Rover Mate.*
,, R. A. Subramaniam	*Scribe.*
,, A. Natesan	*Librarian.*
,, D. Subramaniam	*Club room charge.*

The strength of the crew is now 22; of these 4 are invested Rovers, 12 Tenderfoot Scouts undergoing their probation as Rover Squires, and 6 are recruits. 20 members left the crew in July 1932, 14 because they left the University, and 6 as they found it difficult to take part in the crew meetings. 21 recruits joined in July 1932, of whom 7 dropped off.

The crew met 21 times during the course of the year; the meetings were devoted to practice of Scout Tests, examinations in these tests, and talks by the Rover Leader on Scout organisation, the History of the Movement, other branches (Scout and Club) and other relevant topics. The average attendance at these meetings was 8·5!

There were two camps and one outing during the year. The outing was a visit to the historic town of Tanjore; the crew had an opportunity of making friends with members of the Movement there. The two crews had a combined hike to the Abraham Pandithar's gardens near Tanjore.

The Training School Rovers of Tanjore returned thə visit on 3rd December 1932. The Annamalainagar Rovers were "At Home" to the visiting crew; this was followed by a meeting, where after a programme of music Mr. T. Chengalvaraya Pillai of the Pachiappa's High School gave a short and interesting biographical sketch of Sami Ramalinga. The crew looks forward to many more meetings of the same sort.

The crew, as usual, helped in all the important University functions like the convocation, Inter-collegiate Sports etc., by co-operating with the volunteers in the maintenance of order.

The grant of Rs. 100 from the University continued also during this year, and was used to meet the expenses of camps and equipment; it has been possible also to add a petrol tent to the permanent camp equipment.

The Third Rover Day was celebrated on the 26th February with M.R.Ry. C. S. Srinivasachariar Avl., M.A. as president. M.R.Ry. T. V. Nilakantam Pillai of Tinnevelly gave the address.

The crew tenders its sincere and heart-felt thanks to the Vice-Chancellor and the authorities of the University for their kind interest in the Crew. They also thank the members of the staff for their encouragement.

S. Sankaranarayanan,
Senior Rover Mate.

THE END

JL
T4, t4, M2114C, N29
N33.5.1

TRICHINOPOLY:
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS
1933